தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## முல்லைப் பெரியாறு அணை பராமரிப்புப் பணி: கட்டுமானப் பொருள்களுக்கு தடை விதித்த கேரள வனத் துறை

**கம்பம்,**



முல்லைப் பெரியாறு அணையில் நடைபெற்று வரும் பராமரிப்புப் பணிக்கு தேவையான மூலப் பொருள்களை கொண்டு சென்ற தமிழக லாரியை, கேரள வனத் துறையினர் வியாழக்கிழமை தடுத்து திருப்பி அனுப்பி வைத்தனர்.

முல்லைப் பெரியாறு அணையில் ஆண்டுதோறும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்வது வழக்கம். அணையின் பராமரிப்புப் பணிகளை, இறுதித் தீர்ப்பு வரும் வரை தொடர்ந்து தமிழக அரசு மேற்கொள்ளலாம் என்றும், அதைத் தடுக்கக் கூடாதெனவும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த நிலையில், அணையில் கடந்த மாதம் ரூ. 21 லட்சம் மதிப்பீட்டில் பராமரிப்புப் பணிகள் துவங்கப்பட்டன. ஆனால், கடந்த 10 நாள்களாக பராமரிப்புப் பணிகளை செய்யவிடாமல், கேரள நீர்ப்பாசனத் துறை அதிகாரிகளும், கேரள வனத் துறையினரும் பல்வேறு இடையூறுகளைச் செய்து வந்தனர்.

வியாழக்கிழமை, அணையின் பராமரிப்புப் பணிக்காக, சிமெண்ட், டைல்ஸ், ஜல்லி உள்ளிட்ட கட்டுமானப் பொருள்களை லாரியில் ஏற்றி, அணையின் செயற் பொறியாளர் மாதவன், உதவிச் செயற்பொறியாளர் சௌந்தரம் ஆகியோர்,

வல்லக்கடவு வனப்பகுதி வழியாக அணைக்குக் கொண்டு சென்றனர். ஆனால், வல்லக்கடவு வனப் பகுதியிலுள்ள சோதனைச் சாவடியில், ரேஞ்சர் ராஜேஷ் தலைமையிலான வனத் துறையினர் லாரியைச் செல்லவிடாமல் தடுத்து நிறுத்தினர்.

வனத் துறையினரிடம் தமிழக பொதுப்பணித் துறை அதிகாரிகள் விசாரித்தபோது, கேரள வனத் துறையினர், கேரள நீர்ப் பாசனத் துறையினர், பெரியார் புலிகள் சரணாலய துணை இயக்குநர் சஞ்சீவன்குமார் ஆகியோர், தங்களிடம் ஓர் உத்தரவு கடிதம் கொடுத்துள்ளதாகவும், அதில் தமிழக பொதுப்பணித் துறையின் சார்பில் அணைக்கு பொருள்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களை தடுத்து நிறுத்தி திருப்பி அனுப்பி வைக்குமாறு தெரிவித்துள்ளதாகவும் கூறினர்.

அதேநேரத்தில், தமிழக பொதுப்பணித் துறை அதிகாரிகள், தங்களுக்கு கேரள அதிகாரிகள் அளித்துள்ள அனுமதிக் கடிதத்தை அவர்களிடம் காண்பித்தனர். இருப்பினும், அனுமதி மறுக்கப்பட்டு, லாரியை திருப்பி அனுப்பி விட்டனர்.

இதுதொடர்பாக, பொதுப்பணித் துறை அதிகாரிகள், தமிழக அரசுக்கு தகவல் தெரிவித்தனர். இதனால், மீண்டும் தமிழக-கேரள அதிகாரிகளுக்கிடையே பிரச்னை துவங்கியுள்ளது.

## முல்லைப் பெரியாறு தண்ணீர் அம்மச்சியாபுரம் வந்தடைந்தது

**ஆண்டிபட்டி,**

முல்லைப் பெரியாற்றிலிருந்து திறந்து விடப்பட்ட தண்ணீர் வியாழக்கிழமை காலை, அம்மச்சியாபுரம் அருகே குன்னூர் பாலத்தை வந்தடைந்தது.

ஆண்டிபட்டி பேரூராட்சிப் பகுதிக்கு, குன்னூரில் உள்ள வைகை ஆற்றுப் பகுதியில் உறை கிணறுகள் அமைத்து, அதன்மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது.

கடந்த சில நாள்களாக வைகை ஆற்றில் நீர் வரத்து இல்லை என்பதால், ஆண்டிபட்டி பகுதியில் குடிநீர் விநியோகம் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.இதனால், பொதுமக்கள் பேரூராட்சி அலுவலக முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

மேலும், முல்லைப் பெரியாறு பகுதியில் 100 கனஅடி முதல் 200 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டும், வைகை அணையில் 10 கனஅடிக்குக் கூட தண்ணீர் வந்து சேரவில்லை.

இதையடுத்து, மாவட்ட நிர்வாகத்தினர் முல்லைப் பெரியாற்று பகுதியில் ரோந்து சென்று, அனுமதியின்றி விவசாயத்துக்கு தண்ணீர் எடுத்து வந்த மின் மோட்டார்களை பறிமுதல் செய்தனர்.

தற்போது, முல்லைப் பெரியாற்றிலிருந்து திறந்து விடப்பட்ட தண்ணீர், வியாழக்கிழமை காலை குன்னூர் பாலத்தை வந்தடைந்தது.

தற்போது, அப்பகுதியில் உள்ள உறை கிணற்றிலும் நீர் ஊறத் துவங்கியுள்ளது. இதனால். ஆண்டிபட்டி பேரூராட்சிப் பகுதியில் வழக்கம்போல் தண்ணீர் திறந்து விடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**எரிசக்தி உற்பத்தி குறித்த கருத்தரங்கு**

**மேட்டுப்பாளையம்,**

மேட்டுப்பாளையம், வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், மரங்களிலிருந்து உயிரி எரிசக்தி உற்பத்தி குறித்த இரண்டு நாள் கருத்தரங்கு வியாழக்கிழமை நடைபெற்றது.

கருத்தரங்கிற்கு, கல்லூரித் தலைவர் துரைராசு தலைமை வகித்தார். சென்னை ஆரோமீரா எரிசக்தி நிறுவன நிர்வாக இயக்குநர் சுரேஷ், கோவை வன மரபணுத்துறை ஆராய்ச்சி ஒருங்கிணைப்பாளர் ரகுநாத் முன்னிலை வகித்தார். திட்ட அலுவலர் மற்றும் கல்லூரி துறைத்தலைவர் பார்த்திபன் வரவேற்றார்.

கருத்தரங்கை துவக்கி வைத்து கோவை வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் கே. ராமசாமி பேசியது:

அதிக மர வளங்களை கொண்ட இந்தியாவில் மரங்களிலிருந்து எரிசக்தி உற்பத்திக்கு வாய்ப்பு அதிகம் உள்ளது.

இந்தியாவின் எரிசக்தி வளம் நிலக்கரியைச் சார்ந்தே உள்ளது. எரிசக்தி தேவைக்கு மறுசுழற்சி எரிசக்தி பயன்பாட்டை நாம் அதிகரிக்க வேண்டியது அவசியம். தற்போது, தமிழகத்தில் உள்ள மரம் சார்ந்த உயிரி எரிசக்தி உற்பத்தி

நிறுவனங்கள் மூலம் 160 மெகாவாட் கிடைத்தாலும், மேலும் 480 மெகாவாட் உற்பத்திக்கு வாய்ப்புள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது என்றார். விழாவில், டென்ரோ எரிசக்தி உற்பத்தி, இந்திய வன சேவை, ஆலைகள் சார்ந்த வேளாண் காடுகள் ஆகிய நூல்களை பல்கலைக்கழக துணைவேந்தர் ராமசாமி வெளியிட, அவற்றை ஆரோமீரா எரிசக்தி நிறுவனம் சார்பில் சுரேஷ், ஆராய்ச்சி நிறுவன ஒருங்கிணைப்பாளர் ரகுநாத் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். சிறப்பாக செயல்படும் தேசிய வேளாண் புதுமை திட்டப் பங்குதாரர்கள், விவசாயிகள், கிராமப்புற நிறுவனங்களுக்கு துணை வேந்தர் ராமசாமி விருதுகளை வழங்கினார். நிகழ்ச்சியில் ஆந்திரம், கர்நாடகம், ஹரியாணா, பிகார், பஞ்சாப், சிக்கிம் உள்பட 11 மாநிலங்களைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், தொழில் முனைவோர், முன்னணி விவசாயிகள், வங்கி மற்றும் வனத்துறை அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 50.94 அடி

**ஈரோடு,**

பவானிசாகர் அணை நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 50.94 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 658 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 300 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 4.6 டி.எம்.சி.

## கோடை நெல் சாகுபடிக்கு 1072 டன் யூரியா வந்தது

**தஞ்சாவூர்,**

ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மாவட்டத்தில் கோடை நெல் சாகுபடிக்காக 1072 டன் யூரியா கும்பகோணத்துக்கு வியாழக்கிழமை ரயில் மூலம் வந்தது.

தஞ்சாவூர், நாகை, திருவாரூர் மாவட்டங்களில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் கோடை நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும், ஜூன் மாதத்தில் குறுவை சாகுபடியும் பம்பு செட் மூலம் தொடங்கப்பட உள்ளது. கோடை

சாகுபடிக்கு தேவையான உரங்களை விவசாயிகளுக்கு தேவைப்படும் நேரத்தில் விற்பனை செய்ய தனியார் வியாபாரிகள் தற்போது தயாராகி வருகின்றனர்.

அதற்காக யூரியா மற்றும் காம்ப்ளக்ஸ் உரங்கள், தூத்துக்குடி ஸ்பிக் உர நிறுவனம் சார்பில் 21 ரயில் வேகன்களில் கும்பகோணம் அனுப்பி வைக்கப்பட்டது. கும்பகோணம் ரயில் நிலையத்துக்கு வந்த 1072 டன் யூரியா மற்றும் 352 டன் காம்ப்ளக்ஸ் உர மூட்டைகள், தஞ்சாவூர், நாகை, திருவாரூர் மாவட்டங்களில் உள்ள தனியார் உர விற்பனை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

**கடையத்தில் பலத்த காற்றுடன் மழை: வாழைகள் சாய்ந்தன**

**அம்பாசமுத்திரம்**,

கடையத்தில் புதன்கிழமை மாலை பலத்த காற்றுடன் பெய்த மழையால் வாழைகள் சாய்ந்தன.

கடையம் பகுதியில், பிசான சாகுபடியில் பெரும்பாலான விவசாயிகள் நெல் பயிரிட்டுள்ளனர். தேவையான அளவு தண்ணீர் இல்லாத நிலையில், அவ்வப்பொழுது பெய்த மழையால் நெல்பயிர்களுக்கு தேவையான தண்ணீர் கிடைத்து, அறுவடை நடந்து வருகிறது.

இந்நிலையில் கடந்த இரண்டு நாள்களாக கடையம் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் மாலை நேரங்களில் இடி மற்றும் பலத்தக் காற்றுடன் மழை பெய்து வருகிறது. இதனால் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது. ராமநதி அணையில் புதன்கிழமை 27 மி.மீ., மழையும், வியாழக்கிழமை மாலை நிலவரப்படி 8 மி.மீ., மழையும் பதிவாகியிருந்தது. கடையம் பகுதியில் ஒரு சில விவசாயிகள் வாழையும் பயிரிட்டுள்ளனர்.

கடையம் கல்யாணிபுரத்தைச் சேர்ந்த செல்லப்பா, சோமு ஆகியோரது வயலில் பயிரிடப்பட்ட வாழை குலைதள்ளி பாதி பருவம் வந்த நிலையில் இருந்தன. இந்நிலையில் புதன்கிழமை மாலை பெய்த காற்றுடன் கூடிய மழையால் சுமார் 500-க்கும் மேற்பட்ட வாழைகள் சாய்ந்து விழுந்தன. விவசாயத்துக்கு அணையில் தேவையான நீர் இல்லாத நிலையில், அவ்வப்போது பெய்த மழையால் சிறிது நம்பிக்கை கொண்டிருந்த விவசாயிகள், இந்த மழையால் பெரிதும் கவலைக்குள்ளாகி இருப்பதாகத் தெரிவித்தனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

### நிலக்கோட்டையை நனைத்த மழை

**சென்னை**: "இலங்கை அருகில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு நிலை வலுவிழந்தது. எனினும், கன்னியாகுமரி அருகில், காற்று மேலடுக்கு சுழற்சி நிலை கொண்டுள்ளதால், தென் தமிழகத்தில், ஆங்காங்கே, இரு தினங்களுக்கு மழை நீடிக்கும்' என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த வகையில், நேற்று, திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டையில் மட்டும், 1 செ.மீ., மழை பதிவாகியது. கேரளாவில், சில பகுதிகளிலும், ஆந்திராவில் ஒரு பகுதியிலும் மட்டுமே, மழை பதிவாகியுள்ளது. வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலையால் தமிழகத்தில், சொல்லும் அளவிற்கு கூட நனையவில்லை. "நேற்று முன்தினம், கன்னியாகுமரி அருகில் உருவான காற்று மேலடுக்கு சுழற்சியின் காரணமாக, இன்னும், இரு தினங்களுக்கு, தமிழகம், புதுச்சேரி, கேரளாவில் ஆங்காங்கே, மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யலாம்' என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

### பெரியாறு அணை பராமரிப்பு பணிக்கு அனுமதி மறுப்பு

**கூடலூர்**: பெரியாறு அணை பராமரிப்பு பணிகளுக்காக பொருட்களை ஏற்றிச் சென்ற லாரிக்கு, வல்லக்கடவு "செக் போஸ்ட்'டில் கேரள வனத்துறை யினரால் அனுமதி மறுக்கப்பட்டது. இதனால், கடந்த ஒரு வாரத்தில், இரண்டாவது முறையாக பராமரிப்பு பணிகள் தடைபட்டுள்ளன. முல்லைப்பெரியாறு அணையில், ஒவ்வொரு ஆண்டும் நடக்கும் பராமரிப்பு பணிகள், 10 நாட்களுக்கு முன் துவங்கியது. இதற்காக பெயின்ட், சுண்ணாம்பு, சிமென்ட், டைல்ஸ் உள்ளிட்ட பொருட்கள் அணைப்பகுதிக்கு கொண்டு சேர்க்கப்பட்டன. நான்கு நாட்களுக்கு முன், அணையின் பின்பகுதி நீர்க்கசிவு "கேலரி'யில் உள்ள நடைபாதையில், "டைல்ஸ்' பதிக்கும் பணி துவங்கியது. இதற்கு கேரள

போலீசாரும், பொறியாளர்களும் எதிர்ப்பு தெரிவித்து, பணியை நிறுத்தினர். கேரள மற்றும் தமிழக பொறியாளர்கள் அணைப்பகுதியில் ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வுக்குப் பிறகும், பராமரிப்பு பணிகள் தொடர்பாக கேரள தரப்பில், எவ்வித அறிவிப்பும் இல்லை.

இதனால், பராமரிப்பு பணிகள் தமிழக பொதுப்பணித்துறையினரால் நடந்து வந்தது. இந்நிலையில், நேற்று காலை 7 மணிக்கு, பெரியாறு அணை பராமரிப்பு பணிகளுக்காக, "டைல்ஸ்' உள்ளிட்ட பொருட்களை ஏற்றிச் சென்ற லாரியை, வல்லக்கடவு "செக்போஸ்ட்'டில், கேரள வனத்துறையினர் தடுத்து அனுமதி மறுத்தனர்.

இதனால், அப்பகுதிக்கு சென்ற தமிழக செயற்பொறியாளர் மாதவன், உதவி செயற்பொறியாளர் சவுந்திரம் ஆகியோர், வல்லக்கடவு "ரேஞ்சர்' ராஜேசிடம் பேசினர். "பெரியாறு அணைக்கு, தமிழக பொதுப்பணித்துறையினர் கொண்டு செல்லும் எந்தப் பொருட்களையும் அனுமதிக்கக் கூடாது' என, கேரள உயர் அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளதாக, அவர் தெரிவித்தார். பின், லாரி தமிழகப்பகுதிக்கு திரும்பிச் சென்றது. இதனால், பெரியாறு அணையில் பராமரிப்பு பணிகள், இரண்டாவது முறையாக தடைபட்டுள்ளன.

## கொல்லிமலை புளி வரத்து குறைவால் விலை அதிகரிப்பு

**தம்மம்பட்டி**: தம்மம்பட்டி வாரச்சந்தைக்கு, கொல்லிமலை புளி வரத்து குறைந்துள்ளதால், ஒரு கிலோ புளி, 45 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் உள்ள வால்குழி, வேலிக்காடு, குண்டனிநாடு, கீரக்காடு, ஆலத்தூர், பலவாலி, நாய்கன்கோம்பை ஆகிய பகுதியில், புளியன் மரங்களை அதிகளவு வளர்த்து வருகின்றனர். இங்கு விளையும் புளி, சதை பிடிப்பும், புளிப்பு சுவை மிகுந்துள்ளதால், தம்மம்பட்டி வாரசந்தைக்கு விற்பனைக்கு கொண்டு வரப்படும், புளியை போட்டி போட்டு வாங்கி செல்கின்றனர். பருவமழை பொய்த்து போனதால், புளியன் மரத்தில் காய் பிடிப்பு குறைந்ததால், தம்மம்பட்டி வாரசந்தைக்கு, விற்பனைக்கு கொண்டு வரப்படும் புளியின் வரத்தும் குறைந்துள்ளது. கடந்தாண்டு, ஒரு கிலோ, 19 முதல், 25 ரூபாய்க்கு விற்பனையான புளி, தற்போது கிலோ, 38 முதல், 45 ரூபாய் வரை விற்பனை செய்கின்றனர்.

## வெயிலுக்கு வெடிக்கும் வெள்ளரி பழங்கள்

**மரக்காணம்**: கடும் வெயில் காரணமாக அறுவடைக்கு தயாரான வெள்ளரி பழங்கள் நிலத்திலேயே வெடித்து விடுவதால் நல்ல விலைக்கு விற்க முடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

மரக்காணம் ஒன்றியத்தில் பரவலாக வெள்ளரி பழம் சாகுபடி செய்து வருகின்றனர். கடந்த பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் நடவு செய்து, தற்போது அறுவடைக்கு தயாராகி விட்டது. கீழ்பேட்டை, ஆட்சிக் காடு, ஏரிமேடு உள்ளிட்ட கிராமங்களில் பயிரிடப்பட்டுள்ள வெள் ளரி செடிகளில் ஏழு முதல் 10 பழங்கள் வரை பழுக்கின்றன. இவற்றை அறுவடை செய்து புதுச்சேரி மற்றும் இ.சி.ஆர் சாலை யோரம் விற்பனையை துவக்கியுள்ளனர். ஆனால் பல இடங்களில் அறுவடை செய்யும் நேரத்தில் கடும் வெயிலின் காரணமாக பழங்கள் வெடித்து விடுகின்றன. இவற்றை ஒரே நாளில் விற்பனை செய்ய முடியாது. இவ்வாண்டு கடும் வெயில் காரணமாக வெள்ளரி பயிர் செய்த விவசாயிகள் நஷ்டமடைகின்றனர்.

## கோமாரி தடுப்பூசி பணிகள் குறித்து ஆய்வு

**திருவெண்ணெய்நல்லூர்**: திருவெண்ணெய்நல்லூர் பகுதியில் கோமாரி தடுப்பூசி பணிகள் குறித்து அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

திருவெண்ணெய்நல்லூர் அடுத்த பெரியசெவலை, அரும்பட்டு, ஆத்திப்பட்டு, தடுத்தாட்கொண்டூர், ஆனைவாரி, மாதம்பட்டு பகுதிகளில் கோமாரி தடுப்பூசி பணிகள் குறித்து ஆய்வு நடத்தினர். விழுப்புரம் கால்நடை பராமரிப்பு துறை சிறப்பு அறிஞர் டாக்டர் இளங்கோவன் கிராமங்களுக்கு சென்று மாடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது குறித்து ஆய்வு செய்தார். பயனாளிகளிடம் அடையாள அட்டைகளை சரி பார்த்தார். டாக்டர்கள் சங்கையா, கனகராஜ், உதவியாளர் குணசேகரன் உடனிருந்தனர்.

## முட்டை விலை 18 காசு திடீர் சரிவு

**நாமக்கல்**: தமிழகம் மற்றும் கேரளாவில், முட்டை கொள்முதல் விலை, 277 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து,

பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, முட்டை கொள்முதல் விலையில், 295 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, 18 காசு குறைக்கப்பட்டு, 277 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. நாட்டின் பிற மண்டலங்களில், முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:சென்னை, 330, பெங்களூரு, 315, மைசூரு, 322, ஹைதராபாத், 300, மும்பை, 338, விஜயவாடா, 300, கோல்கத்தா, 340, பர்வாலா, 285, டில்லி, 305. இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 43 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், அதன் விலை கிலோ, 58 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டது. "கோடை வெப்பம் துவங்கி உள்ளதால், முட்டை மற்றும் கறிக்கோழி விலை சரிவை நோக்கிச் செல்கிறது. வரும் நாட்களில், மேலும் விலை குறைய வாய்ப்புள்ளது' என, பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

## அரூர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் பருத்தி ஏலம்

**அரூர்**: அரூரில், 17ம் தேதி நடந்த பருத்தி ஏலத்தில், இரண்டு கோடியே, பத்து லட்சத்துக்கு பருத்தி ஏலம் போனதால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். தர்மபுரி மாவட்டம் அரூரில் இயங்கும் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், வாரந்தோறும் திங்கட்கிழமை பருத்தி ஏலமும், வெள்ளிக்கிழமையில், மஞ்சள் ஏலமும் நடப்பது வழக்கம். இச்சங்கத்துக்கு, அரூர், பாப்பிரெட்டிப்பட்டி, மொரப்பூர், பொம்மிடி, தீர்த்தமலை, கோட்டப்பட்டி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருந்தும் ஏராளமான விவசாயிகள், மஞ்சள், பருத்தியை ஏலத்துக்கு கொண்டு வந்து விற்பனை செய்து வருகின்றனர். இதில், திருப்பூர், ஈரோடு, சேலம், கோவை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள் தனியார் நூற்பாலையை சேர்ந்த நிர்வாகிகள் பலர் பங்கேற்று, பருத்தி, மஞ்சளை வாங்கி செல்கின்றனர். இதனால், அரூர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் பருத்திக்கு போதிய விலை கிடப்பதால், அதிகளவிலான விவசாயிகள் ஏலத்தில் பங்கேற்று பயன் அடைகின்றனர். கடந்த, 17ம் தேதி நடந்த ஏலத்தில், ஆர்.சி.எச்., ரக பருத்தி, 5,000 ரூபாய் முதல், 5,500 ரூபாய் வரையிலும், டி.சி.எச்.,ரக பருத்தி, 7,000 முதல், 7,500 ரூபாய் வரையிலும் ஏலம் போனது.

அரூரில் நடந்த பருத்தி ஏலத்தில், ஊத்தங்கரை, ராஜாபாளையம், சேலம் உள்ளிட்ட பகுதியை சேர்ந்த ஏராளமான விவசாயிகள் பங்கேற்றனர்.

அரூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் அதிகளவில் பருத்தி மூட்டைகளை விவசாயிகள் ஏலத்துக்காக கொண்டு வந்திருந்தனர். கடந்த, ஏலத்தில், இரண்டு கோடியே, 10 லட்ச ரூபாய்க்கு பருத்தி ஏலம் போனதால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

## தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி பயிற்சி அளிப்பு

**கரூர்:** தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உயர்தொழில்நுட்ப உற்பத்தி முறையில் தோட்டகலை பயிர்கள் சாகுபடி பயிற்சி முகாம் கரூர் மாவட்டம் பஞ்சப்பட்டியில் நடந்தது.

இதில் தோட்டக்கலை அலுவலர் தமிழ்செல்வி தலைமை வகித்து பயிற்சி வழங்கினார். காய்கறிசாகுபடி, குழித்தட்டு முறையில் நாற்றங்கால் அமைத்தல், நிழல் கூடாரத்தில் காய்கறி சாகுபடி, துல்லிய பண்ணையம், சொட்டு நீர்பாசனம் அமைத்தல், நீர்வழி உரமிடல் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. சொட்டுநீர் பாசனம் அமைக்கும் முறை, பராமரிப்பு பற்றி விளக்கம் அளிக்கப்பட்டது.

காய்கறி சாகுபடி வீரிய ஒட்டுரகம், தக்காளி, மிளகாய், கத்தரி பயிர்உற்பத்தி முறை செலவுமுறை பற்றிய விபரம், பயிர்பாதுகாப்பு முறைகள் குறித்து முன்னோடி விவசாயி மத்தகிரி சரவணன் பயிற்சி அளித்தார். மத்தகிரி பகுதியில் வயல்நேரிடை பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி ஏற்பாடுகளை தோட்டக்கலை உதவி இயக்கனர் (பொ) கலா, உதவி அலுவலர் நசீர், சந்திரசேகர் ஏற்பாடு செய்திருந்தனர்.

## மார்ச் 31 வரை கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நீட்டிப்பு

**தாடிக்கொம்பு** : கால்நடைகளை தாக்கும் கோமாரி நோய் தடுப்பூசி முகாம், மார்ச் 1 ல் தொடங்கி 21 வரை அந்தந்த கால்நடை மருத்துவ நிலைய பகுதிகளில் நடந்து வருகிறது. இந்த முகாம் மார்ச் 31 வரை நீட்டிக்கப்பட்டு உள்ளது. கால்நடை நோய் புலனாய்வு துறை துனை இயக்குனர் சத்தியநாராயணன்

கூறியதாவது:

கோமாரி நோயை நூறு சதவீதம் ஒழிப்பதே இந்த முகாமின் முக்கிய நோக்கம். இதில், கால்நடைகளுக்கு தடுப்பூசி போட தவறியவர்கள் மருத்துவ நிலையத்திற்கு சென்று போட்டு கொள்ளலாம். அருகில் உள்ளவர்களே நிலையத்திற்கு செல்ல முடியும் என்பதால், மார்ச் 31 வரை விடுபட்ட கால்நடைகளுக்கு மீண்டும் அந்த பகுதிகளுக்கே சென்று ஊசி போட திட்டமிட்டு உள்ளோம். தேதி மற்றும் நேரம் பஞ்சாயத்து தலைவர்கள் அல்லது வார்டு உறுப்பினர்கள் மூலம் தெரிவிக்கப்படும்' என்றார்.தாடிக்கொம்பு கால்நடை துனை மருத்துவர் ஜெயராஜ் கூறுகையில், ""இது வரை இப்பகுதியில் மொத்தம் 55 மையங்களில் 3700 கால் நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டு உள்ளது. விடுபட்டவர்களுக்காக மீண்டும் ஒரு முறை செல்ல உள்ளோம்," என்றார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**எலுமிச்சை விலை அதிகரிப்பு**



**சென்னை**: கோயம்பேடு மார்க்கெட்டிற்கு ஆந்திராவிலுள்ள கூடூர், ராஜம்பேட்டை, தளிகிரி ஆகிய இடங்களில் இருந்து எலுமிச்சை வருகிறது. தற்போது தினமும் 5 லாரிகளில் வருகிறது. 800 பழங்கள் கொண்ட ஒரு மூட்டை என்ற அளவில் லாரி ஒன்றுக்கு 200 மூட்டை வருகிறது. சில்லரை வியாபாரிகளின் தேவையை

பொறுத்து விலையில் மாற்றம் இருக்கும். ஒரு மூட்டை ரூ800 முதல் ரூ1,200 வரை விற்கப்படுகிறது. வடமாநிலங்களில் சில பகுதிகளில் வெயில் கொளுத்துவதால் அந்த பகுதிகளுக்கு ஆந்திராவில் இருந்து எலுமிச்சை அனுப்பப்படுகிறது. இதனால் இந்த விலை மேலும் உயரும் என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

**குன்னூரில் நடந்த சிறப்பு ஏலத்தில் கிரீன் டீ கிலோ ரூ1551க்கு விற்பனை**



**குன்னூர்**: குன்னூரில் உபாசி (தென்னிந்திய தோட்ட அதிபர்கள் சங்கம்) சார்பில் கடந்தாண்டு புதிதாக ஏல மையம் தொடங்கி ஒரு ஏலம் மட்டுமே நடந்துள்ளது. இந்தாண்டு தங்க இலை விருதுக்கான போட்டியில் பங்கேற்றுள்ள தேயிலை தொழிற்சாலைகளில் தேயிலை தூள் 80,329 கிலோ விற்பனைக்கு வைக்கப்பட்டது. இதற்கான சிறப்பு ஏலம் உபாசி ஏல மையத்தில் நேற்று முன்தினம் நடந்தது. இதனை தென்னிந்திய தேயிலை வாரிய செயல் இயக்குநர் அம்பலவா ணன் துவக்கி வைத்தார். இதில், 54,198 கிலோ தேயிலை தூள் விற்பனை செய்யப்பட்டது. இதில் இலை ரகத்திற்கு சராசரியாக கிலோ ரூ161.86, டஸ்ட் ரகத்திற்கு ரூ137.11, அனைத்து ரகத்திற்கும் சராசரி விலையாக ரூ151.39 என இருந்தது.

தென்னிந்தியாவிலுள்ள மற்ற ஏல மையங்களில் விற்பனை செய்யப்படும் தேயிலை தூளின் விலையை விட கிலோ ஒன்றுக்கு ரூ60 வரை கூடுதலாக விலை கிடைத்துள்ளது. இதேபோல் உயர்ரக தேயிலை தூள்களான கிரீன் டீ கிலோ ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ1,551, குறைந்த பட்சமாக ரூ183 என விலை வழங்கப்பட்டுள்ளது. இந்த ஏலத்தில் 2,231 கிலோ கிரீன் டீ விற்பனை செய்ததில் மட்டும் ரூ9 லட்சத்து 49,204 வருமானம் கிடைத்துள்ளது. ஆர்த்தோ டெக்ஸ் ரக

தேயிலை தூளுக்கு கிலோ ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ280, குறை ந்த பட்சமாக ரூ104 விலை கிடைத்துள்ளது. மற்ற ஏலங்கள் மையங்களை விட இந்த ஏல மையத்தில் நடந்த ஒரே ஏலத்தில் மட்டும் ரூ82 லட்சத்து 3,959 வருமானம் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

### போச்சம்பள்ளியில் தக்காளி விலை உயர்வு

**போச்சம்பள்ளி,** : போச்சம்பள்ளியில் தக்காளி விலை உயர்ந்துள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மொத்தம் 9,773 ஹெக்டேர் பரப்பளவில் விவசாயிகள் காய்கறி சாகுபடி செய்து வருகின்றனர். தக்காளியில் வீரிய ரக சாகுபடியில் இரட்டிப்பு மகசூல் காரணமாக சந்தைக்கு வரத்து அதிகரித்தது. இதனால், கடந்த மாதத்தில் கிலோ 75 பைசா வரையிலும் விலை குறைந்ததால் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்தனர்.

இந்நிலையில், கடந்த சில நாட்களாக தக்காளி வரத்து சீராக உள்ளதாலும், தேவை அதிகரித்து வருவதாலும் விலையும் உயர்ந்துள்ளது. போச்சம்பள்ளி சந்தையில் நேற்று காலை ஒரு கிலோ தக்காளி ரூ2 முதல் ரூ5 வரையிலும் விற்பனை செய்யப்பட்டது. இதனால், சற்று ஆறுதலடைந்துள்ள விவசாயிகள் மேலும் விலை உயர வாய்ப்புள்ளதாக தெரிவித்தனர்.

### மெட்டாலாவில் 15 டன் காய்கறி ஏலம்

**நாமகிரிப்பேட்டை,** : நாமகிரிப்பேட்டை அடுத்த மெட்டாலாவில் தினசரி காய்கறி மார்க்கெட் நடக்கிறது. இங்கு நேற்று முன்தினம் சுமார் 15 டன் காய்கறி கொண்டு வரப்பட்டது. அனைத்து காய்கறிகளும் சிறிது நேரத்திலேயே விற்பனையானது. காய்கறிகளின் விலை வருமாறு:

பெங்களூர் தக்காளி கிலோ ரூ6க்கு விற்பனையானது. நாட்டுத்தக்காளி ரூ4, கத்தரிக்காய் கிலோ ரூ16 வரை விற்பனையானது. வெண்டை கிலோ ரூ24, பச்சைமிளகாய் ரூ16, அவரைக்காய் ரூ18, பாகற்காய் தி15, முள்ளங்கி ரூ6, வெங்காயம் கிலோ தி16, பீர்க்கன்காய் கிலோ ரூ12, புடலை ரூ10, விற்பனையானது. பூசணி ரூ5, நீர்பூசணி ரூ6க்கும் விற்பனையானது. சுரைக்காய்

கிலோ ரூ6க்கும், பீட்ரூட் ரூ14க்கும், மாங்காய் ரூ20, சீத்தாபழம் ரூ15க்கும், வாழைப்பழம் கிலோ ரூ35க்கும், காலிபிளவர் ஒரு பூ ரூ18, தேங்காய் ரூ15 வரை விற்பனையானது. கடந்த இரண்டு மாதங்களாக தக்காளி விலை கிலோ ரூ3 அளவிலேயே விற்று வந்தது. நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில் கிலோ 6 ரூபாயாக உயர்ந்தது.

### நிலக்கடலை சாகுடி செயல்விளக்கம்

**அறந்தாங்கி,** : அறந்தாங்கி வேளாண் வட் டாரம் நாட்டுமங்கலம் கிராமத்தில் அட்மா- வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை பண்ணைப்பள்ளி மற்றும் செயல்விளக்கம் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு அறந்தாங்கி வேளாண் உதவி இயக்குனர் பொன்னையா தலைமை வகித்து நிலக்கடலை சாகுபடி தொழில் நுட்பங்கள், நிலக்கடலையில் எவ்வாறு விதைநேர்த்தி செய்யவேண்டும் என்பதை பற்றி செயல்விளக்கம் செய்து காண்பித்தார். நிலக்கடலையில் ஏற்படும் முக்கியமான பூச்சிகளையும், நோய் களையும் எடுத்துக்கூறியும் அவற்றை கட்டுப்படுத்தும் விதம் குறித்தும் எடுத்துரைத்தார். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு எழுது பொருட்கள், நிலக்கடலை சாகுபடி குறித்து கையேடுகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சி ஏற்பாடுகளை அட்மா-வட்டார தொழில் நுட்ப மேலாளர் ஜகுபர்அலி, அட்மா உறுப்பினர் அப்பாவு, தொழில் நுட்ப அலுவலர்கள் கலையரசன், ராமச்சந்திரன் ஆகியோர் செய்திருந்தனர்.

### 24ம் தேதி துவக்கம் காளான், கறவை மாடு, கோழி வளர்க்க இலவச பயிற்சி பெயர் பதிவு செய்ய அழைப்பு

**நாகை,** : மயிலாடுதுறை இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி மையத்தின் சார்பில் இலவசமாக காளான், கறவை மாடு, கோழி வளர்ப்பு பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

நாகை மாவட்டம் மயிலாடுதுறை இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி மையத்தின் சார்பில் கறவை மாடு, உணவு காளான்,

கோழி, ஆடு ஆகியவை வளர்ப்பது பற்றி இலவச பயிற்சி வகுப்பு வரும் 24ம் தேதி முதல் 29ம் தேதி வரை நாகை மாவட்டத்தை சேர்ந்த 30 ஆண், பெண்களுக்கு வழங்கப்பட உள்ளது. பயிற்சி காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 18 வயது முதல் 45 வயது வரை உள்ளவர்கள் தகுதியானவர்கள். பயிற்சியில் சேர பாஸ்போர்ட் அளவு புகைப்படம் 3, படிப்பு, சாதி, வறுமைக்கோடு ஆகியவற்றின் சான்றிதழ்கள், ரேஷன் கார்டு, வாக்காளர் அடையாள அட்டை அல் லது கல்லூரி அடையாள அட்டை ஆகியவற்றின் அசல் மற்றும் ஜெராக்ஸ் கொண்டு வர வேண்டும். சான்றிதழ் சரிபார்த்த பின்னர் அசல் சான்றிதழ்கள் திரும்ப தரப்படும். பயிற்சியின் போது மதிய உணவு, தேனீர் வழங்கப்படும். பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

ஆடு வளர்ப்பு பயிற்சி நாம்கோ, முரளி இல்லம், வாய்மேடு, வேதாரண்யம் தாலுகாவில் வழங்கப்படும். பயிற்சி பெற விரும்புவோர் ஜீவானந்தத்தை 98424 49409 என்ற எண்ணை தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ள வேண்டும். கறவை மாடு வளர்ப்பு பயிற்சி சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம், மீன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம், பூம்புகார் என்ற முகவரியில் வழங்கப்படும். பயிற்சியில் சேர விரும்புவோர் வேளாண். ஆராய்ச்சியாளர் செல்வ ராஜை 04364 260885, 94439 84229 ஆகிய எண் களை தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ள வேண்டும்.

உணவு காளான் பயிற்சி, மயிலாடுதுறை இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி மையம், 80-ஏ, பட்டமங்கலத்தெரு, மயிலாடுதுறை என்ற முகவரியில் வழங்கப்படும். பயிற்சியில் சேர விரும்புவோர் 04364 224319 என்ற எண்ணை தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளலாம். கோழி வளர்த்தல் பயிற்சி மெயின்ரோடு, மருதூர், மடிக்கடை பஸ் நிலையம், மருதூர் தெற்கு, வேதாரண்யம் தாலுகா என்ற முகவரியில் வழங்கப்படும். பயிற்சியில் சேர விரும்புவோர் ஜீவானந்தத்தை 98424 49409 என்ற எண்ணை தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இந்த தகவல்களை மயிலாடுதுறை இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி மைய இயக்குனர் பரமசிவன் தெரிவித்துள்ளார்.

**கோமாரி தடுப்பூசி முகாம்**

***சீர்காழி,*** : *சீர்காழி அருகே வடகால் ஊராட்சியில் கால்நடைகளுக்கு இலவச* கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது.

ஊராட்சி தலைவர் பாலகுமார் தலைமை வகித்தார். ஊராட்சி துணை தலைவர் கமலகண்ணன் முன்னிலை வகித்தார். ஊராட்சி செயலாளர் மணிவண்ணன் வரவேற்றார். கால்நடை உதவி மருத்துவர்கள் எஸ்வந்த்ராவ், விவேகானந்தன் ஆகியோர் 252 கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டனர். இதில் கால்நடை ஆய்வாளர் ராஜா, கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் பழனிவேலு, ராமச்சந்திரன், ஊராட்சி உறுப்பினர்கள் கலியமூர்த்தி, நூருல்ஹசன், அன்வர்ஜான், தங்கமணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**ஊடு பயிராக சோளம் பயிரிடலாம் வேளாண்துறை அறிவுரை**

**பழநி**, : ஊடுபயிராக பயிரிட சோளம் ஏற்றது என வேளாண் துறையினர் தெரிவித்துள்ளனர்.

சோளம் பயிரிட கோ.எஸ் 28, கோ (எஸ்) 30, வீரிய ஒட்டு சோளம் கோ 5 ஆகியவை ஏற்ற ரகங்களாகும். பயிர் அறுவடைக்கு பின்பு சட்டிக்கலப்பை கொண்டு ஆழமாக உழவு செய்ய வேண்டும். இறவை நிலத்திற்கு ஹெக்டேருக்கு 10 கிலோ, மானாவாரி நிலத்திற்கு ஹெக்டேருக்கு 15 கிலோ விதை தேவைப்படும். 45 க்கு 15 சென்டிமீட்டர் அல்லது 45 க்கு 10 சென்டிமீட்டர் இடைவெளி இருக்க வேண்டும். விதைகளை 1 லிட்டர் தண்ணீரில் 20 கிராம் பொட்டாசியம் டை ஹைட்ரஜன் பாஸ்பேட் என்ற அளவில் தண்ணீரில் 6 மணிநேரம் ஊற வைத்த பிறகு 5 மணிநேரம் நிழலில் உலர்த்த வேண்டும்.

ஒரு ஹெக்டேருக்கு 600 கிராம் அசோஸ்பைரில்லம் பயன்படுத்தி விதை நேர்த்தி செய்ய வேண்டும். விதைப்பு செய்த 3ம் நாளும், பின் 10 நாட்களுக்கு ஒரு முறையும் நீர் பாய்ச்ச வேண்டும். மக்கிய தொழு உரம், நுண்சத்து, மக்கிய தென்னைநார் கழிவுடன் அசோஸ்பைரில்லம், பாஸ்போ பேக்டீரியம், சாம்பல் சத்து, தழை மற்றும் மணிச்சத்து போன்றவற்றை வேளாண் அதிகாரிகளை ஆலோசித்து உர நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும். விதைத்த 30 நாட்களில் களை எடுக்க வேண்டும். சோளம் தனிப்பயிராக பயிரிடும்போது அட்ரசின் என்ற களைக்கொல்லியை

தெளிக்க வேண்டும். சோளத்தை ஊடுபயிராக பயிரிடும்போது அலகுளோர் என்ற களைக்கொல்லி மருந்தை பயன்படுத்த வேண்டும். குருத்து ஈ, தண்டு துளைப்பான், கதிர்நாவாய், செம்பேன், துரு நோய், தேன் ஒழுகல் நோய், கதிர் பூசாண நோய், அடிச்சாம்பல் நோய் போன்றவை ஏற்பட்டால் வேளாண் அதிகாரிகளை ஆலோசித்து உரிய மருந்துகளை தெளிக்க வேண்டும்.

கதிர்கள் நன்கு காய்ந்து முற்றிய பிறகு அறுவடை செய்ய வேண்டும். இதுதொடர்பான கூடுதல் விபரங்களுக்கு வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகலாமென வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

### கத்தரி சாகுபடியில் இயற்கை உரங்களை பயன்படுத்த வேண்டும்

**ராமநாதபுரம்**, : கத் தரி சாகுபடியில் இயற்கை உரங்களை பயன்படுத்தி னால் அதிக விளைச்சல் ஏற் படும் என வேளாண் தொ ழில்நுட்ப வல்லுநர் ஆலோச னை தெரிவித்துள்ளார்.

ராமநாதபுரம் மாவட்டம் நயினார்கோவில் அருகே பாண்டியூர், வெங்கடான்குறிச்சி உள்ளிட்ட கிராமங்களில் ஏராளமான விவசாயி கள் கத்தரி பயிரிட்டுள்ளனர். கத்தரி செடிகள் நன்கு வளர் ந்த பின்னர் 6 மாதங்கள் வரை காய் உற்பத்தி இருக் கும் என்பதால் இப்பகுதி விவசாயிகள் ஆர்வத்துடன் கத்தரி பயிரிட்டு வருகின்றனர்.

வீரிய ஒட்டு கத்தரியை விட கிராமங்களில் பயிரிட ப்படும் நாட்டு ரக கத்தரி க்கு சுவை அதிகம். ஓரளவு நல்ல விலையும் கிடைக்கும் என்பதும் கத்தரி சாகுபடி அதிகரித்து வருவதற்கு முக் கிய காரணங்கள். விளைந்த கத்தரிகளை பறித்து, அதிகாலையில் பஸ், வேன் மூலம் 20 கி.மீ. தூரம் வரை அருகே உள்ள நகரங்களுக்கு கொ ண்டு விவசாயிகள் நேரடி யாக கத்தரிக்காய் களை விற் பனை செய்து வருகின்றனர்.

கத்தரி சாகுபடியில் விளைச்சலை அதிகரிக்க மேற் கொள்ள வேண்டிய முறை குறித்து வேளாண் தொழில்நுட்ப வல்லுநர் ஏகாம்பரம் கூறியதாவது: மாவட்டத்தில் 100க்கும் மேற்பட்ட ஹெக்டேர் நிலங்களில் கத்தரி பயிரிடப்பட்டுள்ளது. செம்மண், மணல் கல ந்த களிமண், சரளை மணல் நிலப்பாங்கான பகுதிகள் கத்தரி சாகுபடிக்கு ஏற்ற வை. கத்தரியில் பூச்சி நோய் தாக்குதலை கட்டுப்படுத்த மூலிகை

பூச்சி விரட்டி, பஞ்சகாவியம், ஜீவஅமிர்தம், மீன் அமிலம், உயிர் உரங் கள், வேப்பம் புண்ணாக்கு பயன்படுத்தினால் செலவு குறையும். இயற்கை உரங் களை பயன்படுத்தினால் கத்தரியில் சுவை அதிகரிக்கும். இந்த ஆண்டு வறட்சி காரணமாக கத்தரியில் காய் புழு தாக்கம், மலட்டுத்தன்மை ஏற்பட்டுள்ளது. இதனால் விளைச்சல் பாதிக்கப்படும். இயற்கை உரங் களை பயன்படுத்துவ தன் மூலம் செடிகள் வறட்சி யை தாக்குப்பிடித்து, காய் ப்பு திறன் காலம் அதிகரிக் கும். இதன் மூலம் அதிக விளைச் சல் கிடைக்கும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். விவசாயி ராஜமாணிக் கம் கூறுகையில், “கத்தரி பயிரிட்டுள்ள விவசாயிகளுக்கு மானிய விலையில் இயற்கை உரங்களான வேப் பம் புண் ணாக்கு, வேப்ப எண்ணெய் ஆகியவற்றை அரசு வழங்க வேண்டும்“ என்றார்.

## வெண்டை விவசாயிகளை காலி செய்யும் காய்ப்புழு உதவிக்கு வருகிறது தோட்டக்கலை துறை

**திருச்சுழி**, : வெண்டைக்காயில் காய்ப்புழு நோய் தாக்குதல் ஏற்பட் டால் தடுக்கும் வழிமுறை கள் குறித்து தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் ஆலோசனை வழங்கி உள்ளனர்.விருதுநகர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், கிணற்று நீர் பாசனம் மூலம் காய்கறி விவசாயம் நடக்கிறது. இக்கிராமங்களில் கத்தரிக்காய், வெண்டைக்காய், வெங்காயம், தக்காளி உள்ளிட்ட காய்கறிகள் அதிக அளவில் பயிரிடப்படுகின்றன. தற்போது வெண்டைக்காய் அதிகளவு பயிரிடப்பட்டுள்ளது. வெண்டைக்காயில் தற்போது காய்ப்புழு தாக்குதல் ஏற்பட்டு, செடியிலேயே அழுகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நோய் தாக்குதலை தடுப்பது குறித்து தோட்டக்கலைத்துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, ‘‘காய்ப்புழு தாக்குதல் ஆரம்ப கட்டமாக இருந்தால் என்டோசல்பான் அல்லது குளோரி பைரிபாஸ் 1 லிட்டர் தண்ணீருக்கு 2 மில்லி அளவிலும், தாக்குதல் அதிக அளவு இருந்தால் டிசைடர் மருந்து 1 லிட்டருக்கு 1 மில்லி கலந்து இரண்டு, மூன்று நாட்களுக்கு தெளிக்கவேண்டும். தாக்குதல் புழுவின் பரிணாமம் முட்டை, புழு என பல்வேறு கட்டங்களாக இருப்பதால் லார்வின் மருந்தை 10 லிட்டர் நீருக்கு 20 கிராம் கலந்து தெளித்து வந்தால் இந்நோய் தாக்குதலில் இருந்து தப்பிக்கலாம்,’’ என தெரிவித்தனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கூடலூர் வனக்கோட்டத்தில் அட்டகாசம் செய்யும் குரங்குகளை பிடிக்க வனத்துறையினருக்கு பயிற்சி**



**கூடலூர்,**

கூடலூர் வனக்கோட்ட பகுதியில் அட்டகாசம் செய்யும் குரங்குகளை பிடிக்க வனத்துறையின ருக்கு கூடலூரில் பயிற்சி அளிக்கப்பட்டது.

**<u>வனவிலங்குகள் அட்டகாசம்</u>**

கூடலூர் வன கோட்ட பகுதியில் அடர்ந்த வனங்கள் உள்ளதால் அடிக்கடி குடியி ருப்புகள் மற்றும் விவசாய நிலங்களுக்குள் காட்டு யானைகள், மான்கள், சிறுத்தை புலிகள் மற்றும் வன உயிரினங்களான குரங்குகள் புகுந்துஅட்ட காசம் செய்து வருகின்றன. இதேபோல் சில நேரங்களில் விஷ பாம்புகளும் குடியிருப் புகளுக்குள் புகுந்துவிடு கிறது. இதனால் கடந்த காலக்கட் டங்களில் பாம்புகளை பிடிக் கும் பணியில் தீயணைப்புபடை யினர் ஈடுபட்டு வந்தனர். தற் போது பாம்புகள் பிடிக்க தீய ணைப்பு துறையினர் ஈடுபட கூடாது என கூறப்பட்டு உள் ளது. இதனால் தீயணைப்பு படையினர் பாம்புகள் பிடிக் கும் பணிக்கு செல்வதில்லை. மாறாக அந்தந்த பகுதியில் உள்ள வன உயிரின ஆர்வலர் களை கொண்டு வனத்துறையி னர் பாம்புகளை பிடித்துவனப் பகுதியில் விடுகின்றனர்.

<u>குரங்குகளை பிடிக்க வனத்துறைக்கு பயிற்சி</u>

இதனால் வனத்துறையின ருக்கு வன உயிரின தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் பாம் புகள் பிடிக்கும் வழிமுறைகள் குறித்து அடிக்கடி பயிற்சி அளித்து வருகின்றனர். இத னால் சில சமயங்களில் வனத் துறையினர் பாம்புகளை பிடித்து வனப்பகுதியில் விடும் அளவுக்கு தேர்ச்சி பெற்று வரு கின்றனர். இதேபோல் குடியிருப்பு பகுதிக்குள் குரங்கு கூட்டம் புகுந்து பெரும் அட்டகாசம் செய்து வருகிறது. இதனை தடுக்க வனத்துறையினருக்கு சிறப்பு பயிற்சி கூடலூர் ஈட்டி மூலா வனச்சரக அலுவலக வளாகத்தில் நேற்று நடை பெற்றது. இதில் கூடலூர் வன கோட்டத்தில் உள்ள அனைத்து சரகத்தில் பணி யாற்றும் வனத்துறையினர் கலந்து கொண்டனர். இதில் குரங்குகளைகூண்டுக் குள் வருவதற்கு என்னென்ன வழிமுறைகள் செய்ய வேண் டும். கூண்டின் அருகே மற் றொரு கூண்டுக்குள் மறைவாக இருந்து கொண்டு குரங்கு கூட்டம் நுழைந்த கூண்டினை பூட்டுவது எப்படி? என வனத்துறையினருக்கு செயல் முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

**பூச்சி தாக்குதலால் வெள்ளரிப்பழம் விளைச்சல் பாதிப்பு விவசாயிகள் வேதனை**



**விழுப்புரம்,**

விழுப்புரம் பகுதிகளில் பூச்சிதாக்குதலால் வெள்ளரிப்பழம் விளைச்சல் பாதிப் படைந் துள்ளதால் விவ சாயிகள் வேதனையில் உள்ளனர்.

<u>**வெள்ளரிப்பழம்**</u>

தற்போது கோடை காலம் தொடங்கியுள்ளதால் வெப் பத்தின் தாக்கம் அதிக மாக இருக்கிறது. சுட்டெரிக்கும் வெயிலின் கொடுமையை தாங்க முடியாமல் பொது மக்கள் குளிர்பானம், பழச் சாறு, இளநீர், தர்பூசணி, வெள்ளரிக்காய் ஆகியவற்றை ஆர்வமுடன் வாங்கி சாப் பிட்டு ஓரளவு வெப்பத்தின் தாக்கத்தை தணித்து வரு கின்றனர். பழச் சாறு, இளநீர், குளிர் பானங்கள் மற்றும் பழவகைகள் இவைகளை காட்டிலும் வெள்ளரிப் பழங்கள் குறைந்த விலையில் கிடைப்பதால் பொதுமக்கள் மத்தியில் வெள்ளரிப்பழத் திற் கென்று தனி ‘மவுசு’ உள்ளது.விழுப்புரம் அருகே உள்ள பானாம்பட்டு பகுதிகளில் விவசாயிகள் ஆ ண்டுதோறும் வெள்ளரிப்பழம் சாகுபடி செய்து வருகின்றனர். வழக்கம் போல் இந்த ஆண்டும் வெள் ளரிப் பழம் சாகுபடி செய் துள்ள னர்.இப் பகுதிகளில் வெள்ளரிப்பிஞ்சு, வெள்ளரிப் பழங்கள் என்று தனித்தனியாக சுமார் 100 ஏக்கர் அளவில் விவசாயிகள் சாகுபடி செய் துள்ளனர்.ஆண்டு தோறும் ஜனவரி மாதத்தில் இதை பயிரிடுவர். 3 மாத பயிரான இவை நன்கு வளர்ந்து ஒவ்வொரு ஆண்டும் கோடை காலத்திற்கு பொது மக்களுக்கு மிகவும் பயன் அளிக்கக்கூடிய வகையில் விற்பனைக்கு தயாராக வருகிறது.

**விளைச்சல் பாதிப்பு**

அதுபோல் பானாம்பட்டு பகுதிகளில் விவசாயிகள் பயிரிட்டிருந்த வெள்ளரிப் பிஞ்சு காய்த்து பழமாகி அறு வடைக்கு தயாரானது. அறு வடை செய்வதற்கு இன் னும் 10 நாள் இருக்கும் வேளையில் திடீரென இப் பழங்களில் ஒருவித பூச்சி தாக்கி பழங்கள் அனைத்தும் செடி யில் இருந்தவாறே அழுகி நாசமா கியுள்ளது. ஒரு சில பிஞ்சுகள் பழம் ஆகாமலேயே செடியில் இருந்தவாறு வெம்பி அழுகிய நிலையில் உள்ளது. இப்படி பூச்சி தாக்கு தலால் எண்ணற்ற பழங்கள் அழுகி சேதமாகி யுள்ளது. இதனால் இதை பயிரிட்ட விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற் பட்டுள்ளது.

இதுபற்றி விவசாயிகள் கூறுகையில், நாங்கள் ஆண்டு தோறும் வெள்ளரிப் பழங் களை பயிர் செய்து வருகிறோம். ஒரு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் முதல் ரூ.20 ஆயிரம் வரை செலவு செய்தாலே போதும். ரூ.80 ஆயிரம் முதல் ரூ.1 லட்சம் வரை லாபம் கிடைக் கும். இங்கு அறுவடை செய்யப் படும் வெள்ளரிப் பழங்களை வியாபாரிகள் எங்களிடம் நேரடி யாகவே வந்து எடைக் கணக்கில் வாங்கிச் செல்வர். இதில் நல்ல

வருமானம் கிடைப்பதால் தான் பயிரிட்டு வருகிறோம். ஆனால் இந்த ஆண்டு பூச்சிதாக்கு தலால் அறுவடைக்கு தயா ரான நிலையில் இருந்த அனைத்து வெள்ளரிப் பழங்களும் அழுகி நாசமாகி விட்டது. இதனால் நாங்கள் பெருத்த நஷ்டம் அடைந் துள்ளோம். இதற்காக செலவு செய்த தொகையையும் எடுக்க முடியவில்லை. எனவே அரசு அதிகாரிகள் நேரில் வந்து பார்வையிட்டு எங்களுக்கு உரிய இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

**மூங்கில்துறைப்பட்டு பகுதிகளில் சொட்டுநீர் பாசனத்திற்கு மாறி வரும் விவசாயிகள்**



**மூங்கில்துறைப்பட்டு,**

போதிய தண்ணீர் இல்லாததால் மூங்கில்துறைப்பட்டு பகுதிகளில் சொட்டு நீர் பாசனத்திற்கு விவசாயி கள் மாறி வருகின்றனர்.

<u>சொட்டு நீர் பாசனம்</u>

மூங்கில் துறைப் பட்டு பகுதி களில் விவசாயம் முக்கிய தொழிலாக நடைபெற்று வருகின்றது. இந்நிலையில் கடந்த 2 ஆண்டுகளாக கள்ளக்குறிச்சி பகுதிகளில் பருவமழை பொய்த்து போனதை அடுத்து ஏரி, குளங்கள் வறண்டு போனது. மேலும் கிணறுகளிலும் நீர் மட்டம் வெகுவாக குறைந்தது. இதனால் விவசாயி கள் தொடர்ந்து பயிர் செய்ய முடியாத நிலையில் வயல்களை தரிசு நிலமாக போட்டு

வருகின்றனர். இந் நிலையில் தற்போது கிணற்று நீர் பாசன விவசாயிகள் சொட்டு நீர் பாசன முறையை பயன் படுத்த தொடங்கி யுள்ளனர்.


**<u>அரசு மானியம் கிடைக்குமா?</u>**

இது பற்றிவிவசாயிகளிடம் கேட்டபோது அவர்கள் கூறியதாவது:-

மூங்கில்துறைப்பட்டு பகுதிகளில் மழை பொய்த்து போன காரணத்தினாலும் , தற்போது கோடை காலம் தொடங்கியுள்ளதை அடுத்து விவசாயிகள் சொட்டு நீர் பாசன முறைக்கு மாறி யுள்ளோம். தற்போது இருக் கும் குறைந்தளவு கிணற்று தண்ணீரை பயன் படுத்தி கரும்பு பயிர்களுக்கு மட்டும் சொட்டுநீர் பாசனத்தை பயன்படுத்தி விவசாயம் செய்துவருகிறோம்.

மத்திய, மாநில அரசுகள் சொட்டு நீர் பாசன முறைக்கு கூடுதலாக மானியம் வழங்கி னால், அனைத்து தரப்பு விவசாயிகளும் பயன் பெற முடியும் என கூறினார்.

**வரத்து அதிகரிப்பால் வெற்றிலை விலை வீழ்ச்சி**



**நொய்யல்,**

வரத்து அதிகரிப்பால் வெற்றிலை விலை வீழ்ச்சி அடைந்து உள்ளது.

**<u>ஆயிரக்கணக்கான ஏக்கரில்</u>**

கரூர் மாவட்டம், புங் கோடை, சேமங்கி, முத்தனூர், கோம்புபாளையம், திருக்காடு துறை, தவுட்டுப்பாளையம், என்.புகழூர் உள்ளிட்ட பல் வேறு பகுதிகளில் வெள்ளக் கொடி, கற்பூரி போன்ற வெற் றிலை ரகங்களை ஆயிரக்கணக் கான ஏக்கரில் விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். இங்கு விளையும் வெற்றிலைகள் வேலாயுதம் பாளையம் பகுதிகளில் செயல்பட்டு வரும் தனியார் வெற்றிலை மண்டி களுக்கும், விவசாயிகள் அசோ சியேசன் வெற்றிலை மண்டிக்கும் அனுப்பப்படு கிறது.

**<u>வெளிமாநிலங்கள்</u>**

இந்த பகுதிகளில் இருந்து தமிழ்நாட் டில் உள்ள பல்வேறு மாவட் டங்களுக்கும், ஆந்திரா, கேரளா, கர்நாடகா, உத்தர பிரதேசம், மத்தி பிரதேசம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங் களுக்கும் லாரிகள் மற்றும் ரெயில் மூலம் அனுப்பி வைக்கப்படுகிறது.

கடந்த வாரம் இளங்கால் கற்பூரி வெற்றிலை 104 கவுளி கொண்ட ஒரு சுமை ரூ.2,500–க் கும், முதிகால் கற்பூரி வெற் றிலை ரூ.1,500.க்கும், வெள்ளக் கொடி வெற்றிலை 104 கவுளி கொண்ட ஒரு சுமை ரூ.4,500–க் கும், முதிகால் வெள்ளக் கொடி வெற்றிலை 104 கவுளி கொண்ட ஒரு சுமை ரூ.3,000–க் கும் விற்பனையானது.

**<u>விலை வீழ்ச்சி</u>**

நேற்று இளங்கால் கற்பூரி வெற்றிலை104 கவுளி கொண்ட ஒரு சுமை ரூ.1,500–க்கும் முதிகால் கற்பூரி வெற்றிலை104 கவுளி கொண்ட ஒரு சுமை ரூ.700–க்கும், இளங்கால் வெள்ளக்கொடி வெற்றிலை 104 கவுளி கொண்ட ஒரு சுமை ரூ.3,000–க்கும், முதிகால் வெள்ளக்கொடி வெற்றிலை ரூ.1000–க்கும் விற்பனை யானது.

வெளி மாநிலத்தில் இருந்து வெற்றிலை வரத்து அதிகரிப் பால் வெற்றிலை விலை தொடர்ந்து வீழ்ச்சியடைந்து உள்ளது.

வெற்றிலை விலை தொடர் வீழ்ச்சியால் விவசாயிகள் பெரும் கவலை அடைந்து உள்ளனர்.

**கூடலூரில் கால்நடைகளுக்கு தீவன தட்டுப்பாடு**



கூடலூரில் இருந்து கேரளாவிற்கு வைக் கோல் கொண்டு செல்லப் படுவதால் கால்நடை களுக்கு தீவன தட்டுப்பாடு ஏற்பட்டுள் ளது.

கால்நடை வளர்ப்பு

தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் முல்லைப்பெரியாறு அணை தண்ணீர் மூலம் 14 ஆயிரத்து 707 ஏக்கர் அளவில் நிலங்கள் பாசன வசதி பெற்று வரு கின்றன. விவசாயம்தான் இந்த பகுதியில் பிரதான தொழிலாக உள்ளது. இங்கு 2 போகங்களாக நெல் விவசாயம் நடந்து வருகிறது.

நெல் பயிரிட்டுள்ள பெரும் பாலான விவசாயிகள் கால் நடைகளையும் வளர்த்து வரு கின்றனர். இவற்றில் உயர்ரக பால் மாடுகள் மற்றும் இறைச் சிக்காக வளர்க்கப்படும் தொழுமாடுகளும் அடங்கும். இவற்றில் தொழுமாடுகள் இறைச்சிக்காக கேரளாவிற்கு கொண்டு செல்லப்படுகின்றன. இந்த மாடுகளுக்கு தீவனமாக வயல்களில் அறுவடைக்கு பின்னர் கிடைக்கும் வைக் கோலை பயன்படுத்தி வரு கின்றனர்.

வைக்கோல் தட்டுப்பாடு

தற்போது இந்த பகுதியில் 2-ம்போக நெல் அறுவடை பணிகள் நடைபெற்று வரு கின்றன. மழை இல்லாமல் விளைச்சல் குறைந்ததால் மாடுகளுக்கு தீவனமாக பயன் படும் வைக்கோல் குறைந்த அளவிலேயே கிடைக்கிறது. பெரும்பாலான

இடங்களில் கேரளாவில் இருந்து வரும் வியாபாரிகள் மொத்தமாக விலைக்கு வாங்கி கொண்டு சென்றுவிடு கின்றனர்.

இதனால் கம்பம் பகுதிகளில் வைக்கோல் கிடைக்காமல் கால்நடைகளை வளர்ப்போர் திணறி வருகின்றனர். ஏற் கனவே விவசாயம் கைவிட்ட நிலையில் கால்நடைகளை நம்பியே பெரும்பாலான விவசாயிகள் உள்ளனர். தற்போது ஏற்பட்டுள்ள இந்த தீவன தட்டுப்பாடு மேலும் நீடித்தால் விரைவில் கால் நடை வளர்ப்பு தொழிலும் அழியும் அபாயம் உருவாகி விடும் என்று கால்நடைகள் வளர்ப்பவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

**வேகமாக சரியும் வைகை அணை நீர்மட்டம்**



**ஆண்டிப்பட்டி,**

வைகை அணையின் நீர்மட்டம் வேகமாக சரிந்து வரும் நிலையில் தென்மாவட்டங்களில் மழைபெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் அறிவித் துள்ளதால், வைகை அணை நீர்பிடிப்பு பகுதி களில் மழை பெய்யுமா? என்று அதிகாரிகள் எதிர் பார்த்து காத்திருக் கின்றனர்.

வைகை வறண்டது

தேனி மாவட்டம், ஆண்டிப் பட்டி அருகே வைகை அணை அமைந்துள்ளது. கடந்த ஆண்டு வடகிழக்குப்பருவ மழை பெய்யாததால் 71 அடி உயர வைகை அணையின் முக்கிய நீர் ஆதாரமாக விளங் கும் வைகை ஆற்றில் நீர்வரத்து சுத்தமாக

இல்லாமல் போனது. முல்லைப்பெரியாற்றில் இருந்து திறக்கப்படும் உபரி நீர்தான் அணைக்கு வந்து கொண்டிருந்தது. இந்த நிலை யில் பெரியாறு அணை நீர்ப் பிடிப்பு பகுதிகளிலும் மழை பெய்யாமல் ஏமாற்றியது.

நீர்வரத்து இல்லாமல் போனதால் முல்லைப்பெரி யாற்றில் இருந்து திறக்கப்படும் தண்ணீரின் அளவு குறைக்கப் பட்டது. இதன்காரணமாக 5 மாவட்ட மக்களின் முக்கிய நீர்ஆதாரமாக விளங்கும் வைகை அணையின் நீர்மட் டம் தற்போது கவலை அளிக் கும் விதத்தில் வற்றி கொண்டே செல்கிறது. இதனால் வைகை அணையை மட்டுமே குடிநீர் ஆதாரமாக கொண்டுள்ள மதுரை மாநகரத்தில் குடிநீர் தட்டுப் பாடு ஏற்பட்டுள்ளது. நீர்வரத்து இல்லாத நிலையில் குடிநீர் தேவைக்காக அணை யில் இருந்து வினாடிக்கு 40 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

மழை அறிவிப்பு

இதன் எதிரொலியாக அணையின் நீர்மட்டம் வேக மாக குறைந்து வருகிறது. இதே நிலை நீடித்தால் இன்னும் சில மாதங்களில் குடிநீர் தேவைக்கு கூட தண்ணீர் திறக்க முடியாத சூழ்நிலை ஏற்படும் அபாயம் உள்ளது. இதற்கிடையே வங் கக்கடலில் ஏற்பட்ட காற்ற ழுத்த தாழ்வு நிலையால் தென் தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை மையம் அறிவித் துள்ளது. இந்த அறிவிப்பு வைகை அணை பொதுப் பணித்துறை அதிகாரி களிடையே அதிக எதிர் பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது. வானிலை ஆய்வு மைய அறிவிப்புக்கிடையே வைகை ஆற்று நீர்பிடிப்பு பகுதிகளான கடமலை-மயிலை ஒன்றியத் தில் நேற்று மாலை வானம் மேகங்கள் சூழ்ந்து காணப் பட்டது. நேற்றைய நிலவரப்படி வைகை அணையின் நீர்மட் டம் 30.82 அடியாக காணப் பட்டது. அணைக்கு நீர்வரத்து இல்லாத நிலையில் மதுரை, சேடப்பட்டி கூட்டுக்குடிநீர் திட்டத்திற்காக அணையில் இருந்து வினாடிக்கு 40 கன அடி தண்ணீர் திறக்கப் பட்டது. அணையின் மொத்த நீர்இருப்பு 403 மில்லியன் கன அடியாக காணப் பட்டது. இதேபோல முல்லைப் பெரி யார் அணையின் நீர்மட்டம் 110.50 அடியாக காணப் பட்டது. அணையில் இருந்து வினாடிக்கு 100 கனஅடி தண்ணீரும் திறக்கப்பட்டது. மொத்த நீர்இருப்பு 991 மில்லி யன் கன அடியாக காணப் பட்டது.